கொடுத்திருக்கிறது. இன்னும் ஒன்று சொல்ல வேண்டுமென்று சொன்னால், சென்னை துரித ரயில் போக்குவரத்துத் திட்டம். அந்தத் திட்டம் வரவேண்டும் என்பதற்காக இந்த அரசும், இன்றைக்கு இருக்கின்ற முதலமைச்சர் புரட்சித் தலைவி அவர்களும் அந்தத் திட்டத்தைப் பெறவேண்டும் என்பதற்கு, சென்னையிலே போக்குவரத்து மிகவும் கஷ்டமாக இருக்கிறது; அந்த இரயில் வேகமாக வரவேண்டுமென்று கடிதங்களை எழுதினார்கள். திட்டம் போடப்பட்டது. ஆனால் அதற்கு வேண்டிய பணம் ஒதுக்கப்படவில்லை. அது குறித்து நான் ஒன்றைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். சென்னையிலே தமிழ்நாட்டில் மத்திய பகுதியான சென்னையில் முக்கியமான இடங்களில் 48 ஏக்கர் 68 சென்ட் நிலத்தை இந்த அரசு இனமாகக் கொடுத்திருக்கிறது. இந்த அரசு கொடுத்திருப்பது எத்தனை மனை தெரியுமா ? சுமார் 884 மனைகளாகும். அந்த இடத்தில் ஒரு மனையின் விலை என்ன தெரியுமா சுமார் 50 லட்சங்கள் ஆகும். அதாவது, மொத்தம் எவ்வளவு தெரியுமா ? சுமார் 430 கோடி மதிப்புள்ள நிலத்தை இந்த அரசு இரயில்வே துறைக்கு இனாமாகக் கொடுத்திருக்கிறது என்பதைப் பணிவன்புடன் உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். (குறுக்கீடு).

முற்பகல் 10.25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருமதி பொன்னம்மாள், உங்கள் நிலத்தினுடைய மதிப்பு அளவுக்கு இந்த அரசும் கொடுக்கவில்லை, எந்த அரசும் கொடுக்கவில்லை என்றுதான் அமைச்சர் சொன்னார். ஆனால், நீங்கள் வாரி வாரிக் கொடுத்ததாகச் சொல்கிறீர்கள்.

வினா எண் 44, டாக்டர் வெ. சரோஜா, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்.

44—

மருத்துவ தீர்ப்பாயம் ஏற்படுத்துதல்

*36363—டாக்டர் வெ. சரோஜா:

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மருத்துவ தீர்ப்பாயம் ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

1996 பிப்ரவரி 17]

(ஆ) ஆம் எனில், எப்போது செயல்படுத்தப்படும்?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மருத்துவத் தீர்ப்பாயம் ஏற்படுத்தும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

டாக்டர் வெ. சரோஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, The Consumer Protection Act was passed by the Parliament in the year 1986. அப்போதைய மத்திய மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களும், அப்போதைய பாரதப் பிரதமர் உயர்திரு (லேட்) ராஜிவ் காந்தி அவர்களும் இருந்தபோது, கன்ஸ்யூமர் புரடெக்ஷன் கவுன்சிலுக்கு மருத்துவத்துறை விலக்களிக்கப்படும் என்று உத்தரவு வழங்கப்பட்டது. ஆனால், தற்போதைய நிலையில் உச்ச நீதிமன்றம், மருத்துவம் குறித்த வழக்குகளை விசாரிக்கும் அதிகாரம் நுகர்வோர் நலன்காக்கும் கவுன்சிலுக்கு உள்ளது என்று உத்தரவிட்டுள்ளது. இந்த நிலையில், மருத்துவம் சம்பந்தப்பட்ட புகார் மனுக்களைக் கவனமாகப் பரிசீலித்து, ஒவ்வொரு மனுவின் தன்மையையும் அலசிப் பார்த்து, ஆராய்ந்து, அதனுடைய தெளிவான ஒரு விளக்கத்தை கவுன்சிலுக்குக் கொடுப்பதற்கு மருத்துவர்களைக் கொண்ட ஒரு உயர்மட்டக் குழுவை, ஓய்வுபெற்ற நீதிபதி ஒருவரின் கீழ் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்ஸ்யூமர் கோர்ட்டுக்குப் போகிறபோது அவர்கள்தான் அதை விசாரித்து, முடிவு எடுக்க வேண்டும். அதிலே கூடுதலான விவரங்களைத் தெரிந்து கொள்ள வேண்டுமென்றால், அவர்கள் கருதினால், அவர்கள்தான் கமிட்டி அமைக்க வேண்டியிருக்கும். எனவே, அரசாங்கம் ஒரு நிரந்தரமான கமிட்டியை அமைத்து, அந்தக் கமிட்டியின் மூலம் விசாரித்து அனுப்புவதை அவர்கள நிச்சயமாக ஏற்றுக் கொள்ளமாட்டார்கள் என்று நாங்கள் நினைக்கிறோம். எனவே, இந்தக் கமிட்டியை, இடையிலே ஏற்படுத்துவது என்பது ஒரு வீணான குழப்பத்தை ஏற்படுத்துமேயொழிய, ஒரு நிரந்தரமான முடிவாக இருக்காது. எனவே, கன்ஸ்யூமர் கோர்ட்டுக்குப் போகிற வழக்குகள் அவர்களால் விசாரிக்கப்பட்டு, அதிலே கூடுதலான விவரம் வேண்டும் என்கிறபோது அவர்கள் அதற்கான மருத்துவர்களையோ, மற்றவர்களையோ வைத்து,

ஒரு குழுவாக அமைத்து, அதன் மூலமாக விவரங்களைப் பெறுவதுதான் பொருத்தமாக இருக்கும். எனவே, ஒரு கமிட்டியாக அமைத்து வைப்பது சரியாக இருக்காது என்று கருதுகிறேன்.

டாக்டர் வெ. சரோஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலகம் போற்றும் உத்தமத் தாயின் உன்னத ஆட்சியில், மருத்துவர்களுடைய கடமை உணர்வுக்கும், பொறுப்பு உணர்ச்சிக்கும், தரமான மருத்துவ சிகிச்சைக்கும் பாதிப்பு ஏற்படாத வகையில், மருத்துவத் துறை சம்பந்தப்பட்ட புகார்களை விசாரிப்பதற்கு என்று தனிப்பட்ட 'கன்ஸ்யூமர் புரடக்ஷன் கவுன்சில் பார் மெடிக்கல் செர்வீஸஸ்' என்ற ஒரு அமைப்பை உருவாக்கி, அதன் மூலம் மருத்துவர்களுக்கும் நியாயம் கிடைக்கும் வகையில் மைய அரசை மாநில அரசு வற்புறுத்துமா என்று அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்ஸ்யூமர் கோர்ட்டிலே நியாயம் கிடைக்கும் என்று நாம் நம்பலாம். காரணம், அவர்கள் இரண்டு பக்கமும் விசாரித்துத் தான் முடிவு எடுப்பார்கள். அதிலே எனக்குச் சந்தேகம் இல்லை. நடைமுறையிலே சில சிக்கல்கள் ஏற்படுகின்றன. உச்ச நீதிமன்றத்தினுடைய தீர்ப்புக்குப் பின்னாலே, அவர்களும் கன்ஸ்யூமர் கோர்ட்டுக்குக் கட்டுப்படுவார்கள் என்ற உத்தரவு வந்த பின்னாலே சில நடைமுறைச் சிக்கல்கள் ஏற்படுவதை எங்களால் பார்க்க முடிகிறது. சில இடங்களிலே மிக கிரிடிக்கல் கேஸாக இருந்தால், மருத்துவர்கள் அதை அட்மிஷன் எடுத்துக் கொள்வதற்கே கூட சில நேரங்களிலே தயங்குகிற ஒரு நிலையைப் பார்க்கின்றோம். ஏன் வேண்டாத பிரச்சினையை விலை கொடுத்து வாங்க வேண்டும் என்கிற அளவுக்குப் போய்விடுகிறது. எனவே, இப்படிப்பட்ட சில சிக்கல்கள் ஏற்படுவதாக எங்களுக்குத் தகவல்கள் வந்து கொண்டுதான் இருக்கின்றன. ஆனால், கன்ஸ்யூமர் கவுன்சில் நிச்சயமாக இரண்டு பக்கமும் உள்ள நிலைமைகளைச் சீர்தூக்கிப் பார்த்து, அதற்குப் பின்னாலேதான் நடவடிக்கை எடுப்பார்கள் என்று நாம் முழுமையாக நம்பலாம். அதற்குப் பின்னாலே அப்பீல் செய்வதற்கும் வாய்ப்பிருக்கிறது. உச்ச நீதிமன்றத்திற்குச் செல்லும் வாய்ப்புக்கூட இருக்கிறது. எனவே, இதிலே நாம் பயப்பட வேண்டிய அவசியம் இல்லை என்றுதான் நான் கருதுகிறேன். நடைமுறையிலே எப்படி வழக்குகள் வருகின்றன என்பதைப் பார்த்து, அதற்கேற்ப இதிலே அரசாங்கம் என்ன முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்பதை நாம் முடிவு செய்யலாம். எனவே, இதிலே பொறுப்பேற்றிருக்கக் கூடியவர்கள் பாரபட்சம் இல்லாமல், எப்படி நாம் ஒரு ரிடையர்டு ஜட்ஜை நியமிக்க வேண்டுமென்று கேட்கிறோமோ, அதே

அளவிலே இருக்கக் கூடியவர்கள்தான், அதே உணர்வோடு இருக்கக் கூடியவர்கள்தான் அங்கேயும் ஜட்ஜாக இருப்பார்கள். எனவே. பெரிய பிரச்சினை இருக்காது என்று நாம் நம்புகிறோம். எனவே, மருத்துவர்கள் இதை மனதிலே வைத்துக்கொண்டு வேறுவிதமான ஒரு எண்ணத்தோடு செயல்பட வேண்டிய அவசியம் இல்லை என்றே நான் கருதுகிறேன். எனவே மருத்துவர்கள் முழு நம்பிக்கையோடு இந்தப் பிரச்சினைக்குள்ளே கட்டுப்பட்டுச் செயல்பட வேண்டும் என்ற என்னுடைய வேண்டுகோளை நான் இந்த நேரத்திலே வலியுறுத்த விரும்புகிறேன்.

முற்பகல் 10.30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டாக்டர் எஸ். சுந்தரராஜ்.

டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மருத்துவம் சார்ந்த பிரச்சினைகளில் நுகர்வோர் நீதிமன்றம் என்ற ஒரு இயக்கத்தின் கீழ் மருத்துவம் தெரியாதவர்கள் குறிப்பாக பட்டம்கூட பெறாதவர்கள் எல்லாம் நீதிமன்றத்தில் உறுப்பினராகி அதன் மூலம் மருத்துவர்களைப் பல்வேறு பிரச்சினைகளுக்கு உள்ளாக்குகின்றார்கள். இதனால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதுபோல மக்களுக்கு வைத்தியம் செய்யக்கூட ஒரு இக்கட்டான சூழ்நிலையை மருத்துவச் சமுதாயத்திற்கு உருவாக்கிக் கொண்டிருக்கிறார்கள். குறிப்பாக, ஒரு பெட்டிக் கடையில் ஆஸ்பிரின் மாத்திரை வாங்கி சாப்பிட்டு வயிற்றில் ஓட்டை விழுந்தால்கூட அதை மருத்துவர்தான் எழுதிக் கொடுத்தார் என்று கூறுகின்ற அளவுக்கு இன்றையதினம் மக்கள் அந்த மருத்துவர்கள் பால் வெறுப்பு கொண்டு நுகர்வோர் நீதிமன்றம் என்ற இயக்கத்தின் கீழ் பல்வேறு பிரச்சினைகளுக்கு உள்ளாகின்றார்கள். ஆகவே, மக்கள் பாதிக்காமல் இருப்பதற்கு மருத்துவர்கள் சுதந்திரமாக மருத்துவம் செய்வதற்கு இப்போது மருத்துவ தீர்ப்பாயம் ஏற்படுத்தினால் நல்லது. வணிகர்களுக்கு சேல்ஸ் டாக்ஸ் ட்ரிபியூனல் இருப்பதுபோல் ஒவ்வொரு எம்ப்ளாயிக்கும் அட்மினிஸ்ட்ரேட்டிவ் ட்ரிபியூனல் இருப்பதுபோல் மருத்துவர்கள் சார்ந்த ஒரு சில பிரச்சினைகளை நுகர்வோர் நீதிமன்றம் என்ற தலைப்பின் கீழ் அந்த மெடிக்கல் ட்ரிபியூனல் ஏற்படுத்துகின்ற பொழுது அவர்களுக்கு குறிப்பிட்ட அந்த மருத்துவர்களுக்கு நியாயம் கிடைக்கின்ற சூழ்நிலை ஏற்படுகின்றது. மக்களுக்கும் பாதுகாப்பான சூழ்நிலையை ஏற்படுத்துவதற்கு அந்த மெடிக்கல் ட்ரிபியூனல் ஏற்பாடு செய்யும். ஆகவே, திறமை வாய்ந்த மருத்துவ நிபுணர்கள் மேல் மக்களுக்கு நம்பிக்கை ஏற்படுகின்ற காரணத்தினால் மருத்துவமனைக்குச் செல்வார்கள். அவ்வாறு ஏற்படுத்துகின்ற சூழ்நிலைக்கு முக்கியத்துவம் கொடுத்து

[1996 பிப்ரவரி 17

இனிமேலாவது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்த மெடிக்கல் ட்ரிபியூனல் ஏற்படுத்துவதற்கு முன்வருவாரா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மெடிக்கல் ட்ரிபியூனல் என்பது மாநில அரசால் ஏற்படுத்திவிட முடியாது. நாம் மத்திய அரசுக்குத்தான் பரிந்துரை செய்ய வேண்டும். எனவே இரண்டு அமைப்புகள் இருக்க முடியாது. ஏதாவது ஒன்றுதான் இருக்க வேண்டும். எனவே மெடிக்கல் ட்ரிபியூனல் என்று வந்தால் அதற்குப் பின்னாலே அப்பீல் எங்கே போவது என்ற இதுபோன்ற பிரச்சினைகளும் இருக்கின்றன. எனவே இது வந்துவிட்ட காரணத்தினாலேயே எல்லாவற்றையும் சரியாக பார்த்துவிட முடியும் என்று நான் கருதவில்லை. இப்போது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதைப்போல சில சிக்கல்கள் நான் ஏற்கெனவே சொன்னபடி இருக்கின்றன என்பது உண்மைதான். பொதுவாக மருத்துவர்களுக்கு ஒரு பயம் ஏற்பட்டிருக்கிறது. எனவே சிக்கலாக வருகிற கிரிட்டிக்கல் கேஸஸை அவர்கள் எடுக்க வேண்டாம் என்று தள்ளிவிடுகிற ஒரு நிலையிலே அந்த நோயாளிகள் பாதிக்கப்படுகிறார்கள் என்ற தகவலும் எனக்குச் சொல்லப்படுகிறது. ஆனால் மருத்துவர்களை நான் கேட்டுக் கொள்வது அப்படிப்பட்ட உணர்வு உங்களுக்கு வேண்டாம் என்றுதான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். இதிலே ஒரு கோர்ட் இருக்கிறது என்று சொன்னால் அந்த கோர்ட் நியாயமாக இரண்டு பக்கமும் சீர்தூக்கிப் பார்த்து நடவடிக்கை எடுப்பதற்காகத்தான் கோர்ட் இருக்கிறதே ஒழிய அவர்கள் அங்கே அனுபவம் உள்ளவர்கள் இருக்கிறார்களா மருத்துவர்கள் இருக்கிறார்களா என்று சொல்ல முடியாது. ஒருவேளை அதைப்பற்றி அவர்களுக்குத் தகவல் இல்லை என்று சொன்னால் உரிய மருத்துவர்களை வைத்து விசாரித்துத்தான் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்கள் என்பதிலே நமக்கு எந்தவிதமான சந்தேகமும் வேண்டாம் என்று நான் கருதுகிறேன். அதே நேரத்திலே மருத்துவர்கள் எப்படியெப்படி பாதிக்கப்படுவார்கள் என்று கருதுகிறோமோ அதேபோல நோயாளிகளும் பல நேரங்களிலே பாதிக்கப்பட்டு விடுகிறார்கள் என்பதையும் நாம் மறந்துவிட முடியாது. சில நேரங்களிலே, சில பேர், எல்லோரும் செய்கிறார்கள் என்று நாம் சொல்லிவிட முடியாது. சில மருத்துவர்கள் தவறாக செய்துவிடுவதை நாம் பத்திரிகையிலே பார்க்கிறோம். சில பேர் கத்திரிக்கோலை வைத்து அங்கேயே தைத்து அனுப்பி விடுகிறார்கள். இப்படிப்பட்ட நிலைமைகூட இருக்கிறது. எனவே இரண்டு பக்கமும் இந்தச் சிக்கல் இருக்கிறது. ஆனால் இருந்தாலும் கூட ஒட்டுமொத்தமாக பார்க்கின்றபோது சிலபேர் செய்கிற காரணத்தினால் மருத்துவர்களுக்கு ஒரு பயம் ஏற்பட்டு அந்த பயத்தின் காரணமாக நோயாளிகள் பாதிக்கப்படுகின்ற ஒரு நிலை வந்துவிடக்

கூடாது என்பதிலேயும் அரசாங்கம் கவனமாகத்தான் இருக்க வேண்டிய அவசியம் இருக்கிறது. எனவே இதைப்பற்றி - நாம் ட்ரிபியூனல் தனியாக அமைக்க வேண்டுமா என்பதைப்பற்றி இப்பொழுது யோசிப்பதற்கு அவ்வளவு அவசியம் இல்லை என்று கருதுகிறேன். ஆனால் கன்சியூமர் கௌன்சிலிலே இந்த வழக்குகள் வருகின்றபொழுது இந்த வழக்குகள் எப்படியெல்லாம் கையாளப்படுகிறது, எப்படியெல்லாம் தீர்ப்பு கொடுக்கப்படுகிறது என்பதையெல்லாம் நாம் பார்த்த பின்னாலே அதிலே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவிப்பதைப் போல மிகப் பெரிய பிரச்சினைகள் உருவாகுமேயானால் அப்போது இதிலே என்ன மாற்று வழிகளை நாம் கண்டுபிடிக்கலாம் என்பதைப்பற்றி ஆய்வு செய்யலாம் என்று கருதுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 45, திரு. கு. சீனிவாசன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்.

45---

ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்தல்.

82014---திரு. கு. சீனிவாசன்:

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா---

(அ) மன்னார்குடி தொகுதி, புள்ளமங்கலம் கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): தஞ்சாவூர் மாவட்டம், மன்னார்குடி தொகுதி, புள்ளமங்கலம் கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் சாத்தியக்கூறு இல்லை.

முற்பகல் 10.35

திரு. கு. சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சுகாதாரத்துறை அமைச்சர் அவர்கள் மன்னார்குடி தொகுதி, புள்ளமங்கலம் கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் ஆரம்பிப்பதற்கான